# அரசு தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6
# மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு – மார்ச்/ஏப்ரல் 2023
# உயிரி – தாவரவியல்

குறிப்பு

1. நீலம் அல்லது கருப்பு மையினால் எழுதப்பட்ட விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
2. பகுதி I–ல் கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதப்பட்டிருக்க வேண்டும்.

## பகுதி – I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **8x1=8**

| TYPE – A | | | TYPE - B | | |
|---|---|---|---|---|---|
| 1 | ஆ | வேகமான ஊட்டச்சத்து சுழற்சி | 1 | அ | M.S. சுவாமிநாதன் |
| 2 | ஈ | ஜின்ஜிபெரேசி | 2 | இ | தழை உரம் |
| 3 | அ | பசலை மண் | 3 | ஈ | கருப்பை |
| 4 | அ | ஆக்குத்திசு வளர்ப்பு | 4 | ஈ | ஜின்ஜிபெரேசி |
| 5 | அ | M.S. சுவாமிநாதன் | 5 | ஆ | வேகமான ஊட்டச்சத்து சுழற்சி |
| 6 | இ | தழை உரம் | 6 | ஈ | *அக்ரோபாக்டீரியம் டியுமிபேசியன்ஸ்* |
| 7 | ஈ | கருப்பை | 7 | அ | ஆக்குத்திசு வளர்ப்பு |
| 8 | ஈ | *அக்ரோபாக்டீரியம் டியுமிபேசியன்ஸ்* | 8 | அ | பசலை மண் |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

## பகுதி–II

**ஏதேனும் நான்குவினாக்களுக்குவிடையளிக்கவும்:** **4x 2 = 8**

| | | | |
|---|---|---|---|
| 9 | **ஸ்டோமியம்**<br>இரண்டு வித்தகங்களை இணைக்கும் ஒரு மகரந்த மடல் பகுதியில் அமைந்த செல்களில் தடிப்பு காணப்படுவதில்லை. இப்பகுதிக்கு ஸ்டோமியம் என்று பெயர். | | **2** |
| 10 | **இணை சேர்தல் வகைகள்**<br>1) மையம் தொடங்கி இணை சேர்தல்<br>2) நுனிதொடங்கி இணை சேர்தல்<br>3) இயைபிலா இணை சேர்தல் | | **2** |
| 11 | **மரபணுமாற்ற வேதிப் பொருள்கள்**<br>1) பாலி எத்திலின் கிளைக்கால் அல்லது PEG – 1<br>2) டெக்ஸ்ட்ரான் சல்ஃபேட் – 1 | | **2** |
| 12 | **PAR (ஒளிச்சேர்க்கை சார் செயலூக்ககதிர் வீச்சு)**<br>தாவரங்களின் ஒளிச்சேர்க்கைக்கு கிடைக்கக்கூடிய ஒளிஅளவு ஒளிச்சேர்க்கை சார் செயலூக்க கதிர் வீச்சு எனப்படும்.<br>(அல்லது)<br>தாவரங்களின் ஒளிச்சேர்க்கைக்கு கிடைக்கக்கூடிய ஒளியின் அளவு 400 – 700nm இடைப்பட்ட அலைநீளம் கொண்ட கதிர்வீச்சு ஒளிச்சேர்க்கை சார் செயலூக்க கதிர் வீச்சு எனப்படும்.<br>(அல்லது)<br>400–700nm அலைநீளம் கொண்ட ஒளி, ஒளிச்சேர்க்கை சார் செயலூக்க கதிர் வீச்சு எனப்படும். | | **2** |
| 13 | **முதல்நிலை அறிமுகப்படுத்துதல்** | **இரண்டாம்நிலை அறிமுகப்படுத்துதல்** | **2** |
| | அறிமுகப்படுத்தப்படும் தாவரம் மரபணுவகைய விகிதத்தில் எந்தவித மாறுபாடுறாமல் புதிய சூழ்நிலைக்கு தன்னை தகவமைத்தல். | அறிமுகப்படுத்தும் இரகமானது தேர்ந்தெடுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு அதிலிருந்து மேம்படுத்தப்பட்ட இரகம் தனித்து பிரிந்து, அதனுடன் உள்ளூர் இரகமானது கலப்பு செய்து ஒன்றோ (அ) ஒன்றிற்கு மேற்பட்ட பண்புகளைஅவற்றில் மாற்றுவதாகும் | |
| 14 | **கூட்டுப் பரிணாமம்**<br>உயிரினங்களுக்கு இடையிலான இடைச் செயல்களில் இரு உயிரிகளின் மரபியல் மற்றும் புற அமைப்பியல் பண்புகளில் ஏற்படும் பரிமாற்ற மாறுபாடுகள் பல தலைமுறையை கருத்தில் கொண்டு தொடர்கிறது. இத்தகைய பரிணாமம் கூட்டுப் பரிணாமம் எனப்படும். | | 2 |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

## பகுதி–III

**ஏதேனும் மூன்று வினாக்களுக்குவிடையளிக்கவும்: (வினா 19 கட்டாய வினா)** **3x 3 = 9**

| | | | |
|---|---|---|---|
| **15** | **ஒட்டுதல்** | **பதியமிடல்** | |
| | இரு வெவ்வேறு தாவரங்களின் பாகங்கள் இணைக்கப்பட்டு தொடர்ந்து ஒரே தாவரமாக வளர்கிறது.<br>தரையுடன் தொடர்புடைய தாவரப்பகுதி **வேர்க்கட்டை,**<br>ஒட்டுதலுக்கு பயன்படுத்தப்படும் தாவரப் பகுதி **ஒட்டுத்தண்டு.** | பெற்றோர் தாவரத்தண்டு தாவரத்தோடு ஒட்டியிருக்கும்போது அதிலிருந்து வேர் தோன்றுவதற்கு தூண்டப்படுகிறது.<br>வேர் தோன்றிய பின் வேர் பகுதி வெட்டி நீக்கப்பட்டு புதிய தாவரம் உருவாக்கப்படுகிறது. | 2 |
| | (எ.கா)<br>எலுமிச்சை, மா, ஆப்பிள்<br>**(ஏதேனும் ஒன்று)** | (எ.கா)<br>*இக்ஸோரா, ஜாஸ்மினம்*<br>**(ஏதேனும் ஒன்று)** | 1 |
| **16** | **மடியம் முக்கியத்துவம்**<br>1) அதிக வீரியம், அதிக தகவமைப்பு கொண்டது.<br>2) தாவர மலர் பெரியது, நீண்ட மலரும் காலம் கொண்டது.<br>3) அதிக நீர் சத்தினைக் கொண்டது, அதிக உயிர் எடையைப் பெற்றது.<br>4) குரோமோசோம் இழப்பு / சேர்ப்பு –புறத்தோற்ற விளைவை தீர்மானிக்கும்.<br>5) பரிணாமத்தில் முக்கியப் பங்காற்றுகிறது.<br>**(ஏதேனும் மூன்று)** | | 3 |
| **17** | **வணிக வேளாண் காடு**<br>1) *கேசுரைனா*<br>2) *யூக்களிப்டஸ்*<br>3) மலைவேம்பு<br>4) தேக்கு<br>5) கடம்பு **(ஏதேனும் நான்கு)** | | 3 |
| **18** | ***ஸ்பைரூலினா* வளர்ப்பிற்கான பொருட்கள்:**<br>1) உருளைக்கிழங்கு பதப்படுத்தப்படும் தொழிற்சாலை கழிவுநீர் (அல்லது) தரசம் கொண்டது.<br>2) வைக்கோல்<br>3) வெல்ல சக்கைப்பாகு<br>4) விலங்கு உரம்<br>5) கழிவு நீர் **(ஏதேனும் மூன்று)** | | 3 |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | | |
|---|---|---|
| 19 | **உயிரி கண்காணிப்பு**<br>சூழல்தொகுப்பு, உயிரி பன்மக்கூறுகள், இயற்கை வாழிடங்கள், சிற்றினம் மற்றும் உயிரினத் தொகை சார்ந்த நிலப்பரப்பு ஆகியவற்றில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மாற்றங்கள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை குறித்து கண்காணிக்கவும் மதிப்பிடவும் உதவும் ஒரு செயலாகும்.<br>**(அல்லது)**<br>1. ஆளில்லா பறக்கும் எந்திரம் வேளாண்மைக்கு உதவுகிறது.<br>2. வேளாண்மைக்கு உதவும் ஆளில்லா வானூர்தி வானிலிருந்து கண்காணிக்கும் வாய்ப்பிணை வழங்குகிறது.<br>3. கூரிய பார்வை கண்காணிப்பு<br>4. பாதுகாப்பான சிக்கனமான முறை. **(ஏதேனும் மூன்று)** | 3 |

## பகுதி–IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் :** **2x5=10**

| | | |
|---|---|---|
| 20 (அ) | **காற்று மகரந்தச்சேர்க்கை மலர் பண்புகள்: (ஏதேனும் ஐந்து)**<br>1) மலர்கள்,தொங்கு, தொங்குகதிர், கதிர் மஞ்சரியில் காணப்படும்.<br>2) மஞ்சரி அச்சு நீண்டு இலைகளுக்கு மேல் காணப்படும்.<br>3) பூவிதழ் இன்றியோ அல்லது குன்றியோ காணப்படும்.<br>4) மலர்கள் சிறியவை, தெளிவற்றவை, நிறமற்றவை, மணமற்றவை, பூத்தேன் சுரக்காதவை.<br>5) மகரந்தத்தாள்கள் எண்ணற்றவை, மகரந்தக் கம்பி நீண்டு, வெளிநோக்கி, வளைந்து, மகரந்தப்பை சுழலக்கூடியவை.<br>6) அதிக மகரந்தத்துகள்கள், சிறியவை, உலர்ந்தவை, எடை குறைவு, நீண்ட தூரம் செல்லும்.<br>7) மகரந்தப்பைகள் வெடித்து மகரந்தத்துகள்கள் வெளியேறும்.<br>**எகா.அர்டிகா.**<br>8) சூலகமுடி பெரியது, துருத்திக் கொண்டும், கிளைத்தும், இறகு போன்றது. ஒரு சூல் கொண்டது.<br>9) இலை தோன்றும் முன் மலர்கள் உருவாகும்.<br>**(அல்லது)** | 5 × 1 = 5 |
| 20 (ஆ) | **முழுமை பெறா ஓங்கு தன்மை**<br>1) **எகா– மிராபிலிஸ் ஜலாபா (அ)** அந்திமந்தாரை (அ) 4 மணிதாவரம்<br>2) **விளக்கம்**<br>3) **சரிபார்க்கும் கட்டம்**<br>4) புறத்தோற்ற விகிதம்– 1 : 2 : 1 (சிவப்பு : இளஞ்சிவப்பு : வெள்ளை)<br>5) மரபணுவாக்க விகிதம் – 1 : 2 : 1 ( $R^1R^1$: $R^1R^2$: $R^2R^2$) | 1<br>2<br>1<br>½<br>½ |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | | |
|---|---|---|
| 21 (அ) | **வறண்ட நிலத் தாவர உள்ளமைப்பு தகவமைப்பு (ஏதேனும் ஐந்து)**<br>1. நீராவிப்போக்கை தவிர்க்க பல்லடுக்கு புறத்தோலுடன் தடித்த கியூட்டிக்கிள் காணப்படும்.<br>2. புறத்தோலடித்தோல் ஸ்கிலிரங்கைமா செல்களால் ஆனது.<br>3. உட்குழிந்த குழிகளில் தூவியுடன் கூடிய இலைத்துளை கீழ்புறத்தோலில் காணப்படும்.<br>4. இரவில் திறக்கும் இலைத்துளை<br>5. பல்லடுக்கு கற்றை உறை கொண்ட நன்கு வளர்ச்சியடைந்த வாஸ்குலத் திசுத் தொகுப்பு காணப்படும்<br>6. இலையிடைத்திசு–பாலிசேடு, பஞ்சு பாரன்கைமா திசுவாக வேறுபாடு அடைந்துள்ளது.<br>7. நீர் சேமிக்கும் திசு சதைப்பற்றுள்ளவற்றின் தண்டுகளில் காணப்படும்.<br>**(அல்லது)** | 5 |

| 21 (ஆ) | பெயர் (1+1) | செயலாக்கமருந்து (½+½) | பயன்கள் (1+1) | |
|---|---|---|---|---|
| | 1) கீழாநெல்லி | ஃபிலாந்தின் | 1) மஞ்சள் காமாலை அல்லது கல்லீரல் நோய்க்கு மருந்து<br>2) ஹெப்படைடிஸ் பி வைரஸ்க்கு எதிராக செயல்படுகிறது. | 2½ |
| | 2) நிலவேம்பு | ஆன்ட்ரோகிராஃபலைடுகள் | 1) கல்லீரல் நோய் மருந்து அல்லது **கல்லீரல் பாதுகாப்பி**<br>2) மலேரியா மற்றும் டெங்குவிற்கான மருந்து | 2½ |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com